ஓம்சக்தி

ந்தேமாதரம்

# ஹரிஜன சேவாகீதம்

## இரண்டாம் பாகம்



எவனுடைய மனம் ஏழைகளுக்காக
இரங்கி இரத்தம் வடிக்கின்றதோ அவனே மகாத்மா.

(சுவாமி விவேகானந்தா).

ஆக்கியோன்

**க. அ. ஆறுமுகன்.**

1934.

...து.] [விலை 0-1-0.

D-,IMAN9,H
N34
77252

# எதிரொ

சாதிகள் இல்லையடி பாப்பா
குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்தமதி கல்வி அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

* * *

எல்லாரு மொன்றென்னுங் காலம் வந்ததே—பொய்யும்
ஏமாற்றுந் தொலைகின்ற காலம் வந்ததே
நல்லார் பெரியாரெனுங் காலம் வந்ததே—கெட்ட
நயவஞ்சக்காரருக்கு நாச[illegible] வந்ததே.

* * *

எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்தியா மக்கள் நாம்
எல்லாரு மோர்நிறை எல்லாரும் ஓர் விலை
எல்லாரு மிந்நாட்டு மன்னர்.

* * *

ஜாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்.

(கவியரசன் பாரதி)

# முகவுரை.

ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு என்பது கவியரசர் வாக்கு. இது மந்திரம், இது தெய்வ வாக்கு. ஒரு குடும்பம் தந்தை, தாய், குழந்தை குட்டிகள், இக்குடும்பம் ஓங்கி வளருவதற்கு இன்றியமையாத கருவியாது? சீரும் சிறப் புமுறுவதற்கு வேண்டிய பொருள் யாது? இவர்கள் யாவர் மனத்திடையும் நிலவவேண்டிய ஒற்றுமை, மன்பான்மை யேயாகும். பிறபேறுகள் எத்துணையாயினும் ஒற்றுமைச் செல்வமின்றேல் குடும்பம் ஓங்கி வளருமா? சிதைபட்டு அழிந்துவிடுமல்லவா? ஒற்றுமை, சமத் தன்மை, சகோ தரத் தன்மை உள்ளத்தில் வள்ரவேண்டும்.

குடும்பம் எப்படியோ அப்படியே சமுதாயமும்; சமு தாயம் வளம்பெற வளர ஒற்றுமை வேண்டும். ஒற்றுமைச் செடி வளர சமத்தன்மை விதை தூவவேண்டும்.

மனிதர் யாரும் ஒருநிகர் என்ற உணர்ச்சி விதையை ஒவ்வொரு மனிதன் உள்ளத்திலும் ஊன்றவேண்டும்; இந்த ஞானம் வந்தாற் பின் நமக்கெதுவேண்டும்?

இந்த ஞான விதையை ஊன்றவொட்டாது தடுப்பது தான் தீண்டாமையென்னும் வழக்கம். தீண்டாமை என் பது மனிதனை மனிதன் கேவலமாகவும், கொடுமையாகவும் நடத்துவது. மனிதனை மனிதனுகப் பாவியாது நடத்துவது இவ்வழக்கம் கொடிய வழக்கம். நம்முடைய சக்தியையும், பெருமையையும் கொன்றுதின்னும் வழக்கம் என்பதே மஹாத்மா காந்தியடிகள் கண்டறிந்து முழக்கிவரும் உண்மை யாகும். இத் தீண்டாமையை விரைவில் ஒழிப்பதற்காகக் காந்தியடிகளால் ஹரிஜன இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வரிய பெரிய காரியத்திற்குப் பலர் பலவாறு உதவி புரிந்து தீண்டாமையை ஒழித்துவருகின்றனர். உயர் சாதி இந்துக்கள் என்று சொல்லிக்கொள்ளுவோர் மனத்தில் இவ் வுண்மையை வேரூன்றச் செய்யவேண்டிய நிலை ஏற்பட் டிருக்கிறது.

உண்மையைப் பரப்புவதற்கும், உள்ளத்தில் உணர்ச்சி எழுப்புவதற்கும் உரிய கருவி சங்கீதமே. இன்பமளித்துச் செவிப்புலன் வழி நுழைந்து உள்ளத்தில் உயரிய எண்ணங்களை உதிக்கச்செய்வது இனிய கீதங்களேயாகும். இவ்வுண்மையை யறிந்தே சுப்ரமண்ய பாரதியார் தன் கவிமுரசால் தமிழ் நாட்டின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டார் ஊக்கத்தை ஊட்டி உணர்ச்சியைக் கூட்டி விடுதலை வழியைக் காட்டிப்போந்தார்.

இராமலிங்கம்பட்டி அன்பர் திரு க. அ. ஆறுமுகன் அவர்கள் இத்துறையில் நின்று ஹரிஜன சேவைசெய்வது பெரிதும் போற்றத்தக்கது. எளிய நடையில் உணர்ச்சி ததும்பும் வகையில் அரிய கீதங்கள் பாடியுள்ளார். இவரியற்றியுள்ள இந் நூலுக்கு அண்ணாமலை நகர் சர்வகலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பேரறிஞரும், எனது மாமனருமான ஸ்ரீமான் S. S. பாரதியாரவர்கள் மதிப்புரையைக் கண்டு மகிழ்கின்றேன். இவரியற்றிய பாடல்களை ஹரிஜன சகோதரர் ஒருவர் பாடக் கேட்டுப் புளகாங்கிதமெய்தினேன். பாட்டுக்கள் எந்த நோக்கத்தோடு பாடப்பட்டனவோ அந்த நோக்கத்தைப் பூர்த்திசெய்யு மென்பதில் எனக்கு ஐயமில்லை. தமிழர்கள் இக்கீதப் புத்தகத்தை வாங்கிப் படித்து பாட்டுக்களைப் பரப்பிவருவார்களானால் அது ஒன்றே அன்பர் ஆறுமுகனவர்களுக்கும், ஹரிஜன இயக்கத்திற்கும், செய்துவரும் நன்றியும் பேருபகாரமுமாகும். பாரததேவி அவ்வாறே அருள் புரிவளாக!

1880
164·0954

இங்ஙனம்,

மதுரை, } L. கிருஷ்ணசாமி பாரதி,
29-8-1934. } எம்.ஏ., பி.எல்.

# மதிப்புரை.

இராமலிங்கம்பட்டி திருவாளர். க. அ. ஆறுமுகனார் பாடிய ஹரிஜன சேவா கீதங்களைப் படிக்கக் கேட்டேன். ஆசிரியருக்கு மஹாத்மா அவர்களின் இந்த இயக்கத்தி லுள்ள உண்மை விசுவாசமும், ஹரிஜன சகோதரரிடம் நிறைந்துள்ள அன்பும் இவர் கீதங்களில் நன்றாகத் துலங்கு கின்றன.

இலக்கண வரம்பையே வெறுக்குமிக்காலத்தில் கீதங் களை இறுக நுணுக நிறுக்க அவசியமில்லை. இனிய எளிய நடையில் பாமரருக்கெல்லாம் தன் கருத்தையும், சர்வ சமு தாய சோதரர்பால் தனக்குள்ள சம நிலைக் காதலையும் தெளி வாகத் தன் கீதங்களில் புலப்படுத்துந் திறமை மெச்சத் தக்கது.

தேசீய கீதப் பெரும் புலவரான பாரதியார்பால் இவருக்குள்ள மெய்யன்பே இக்கீதங்களைப் பாட இவரைத் தூண்டியதாகத் தெரிகிறது. இவர் இன்னும் பல நல்ல தொண்டுகளைச்செய்து இனிது வாழுமாறு பல்லாண்டு கூறுகிறேன்.

அண்ணாமலைநகர்
சிதம்பரம். } S. S. பாரதி, எம்.ஏ., பி.எல்.,



க. அ. ஆறுமுகன்

ஆக்கியோன்.

ஓம் சக்தி.

## பராசக்தி வணக்கம்.

பேரறத்தினைப் பேணுநல் வேலியே!
சோரவாழ்க்கை துயர்மிடி யாதிய
காரருக்கக் கதித்திடு சோதியே!
வீரருக்கமுதே! நினைவேண்டுவேன். (—பாரதி.)

---

## பாரததேவி தோத்திரம்.

அந்தமிகுந்த முகுந்தன் மருகனே என்ற மெட்டு.

செஞ்சரணந்துணை தந்தருள் பாரத
தேவி எங்களாவி அருள்மேவி (செஞ்)

தேடிநின்றுதி பாடியாங்கள் கொண்
டாடினேம் துயர்தீரும் ததிவாரும் கண்பாரும் (செஞ்)

தொகையரு.

வஞ்சகச் செயலென்னுந் தீண்டாமைப் படுகுழியில்
மக்கள் பலபேரை வீழ்த்தி
வைதீக மார்க்கமென வித்தியாசஞ் செய்து
வைத்த ஸனாதனிகள் நெஞ்சம்

பாட்டு

மாசற்று சம • நேசத்தோடுயர்
வாசமாம் அன்பு வாழ்வு தா நீதா மாதா சதா (செஞ்)

---

குன்றுதோறுடும் வடிவேலா என்ற மெட்டு.

இராகம்—இந்துஸ்தான் காபி. தாளம்—ஆதி.

பல்லவி

அன்னை ஓம் பாரத ராணி
அஹிம்ஸா சொரூபியே கல்யாணி (அன்)

அனுபல்லவி

இன்னிலமே எத்திப் போற்றும்
இறைவி உன் திருவடி பணிந்தோம் (அன்)

தொகையறு

மனிதனை மனிதன் தாழ்வாய் மாபெரு மடிமையாக்கி
வைத்தவீண் வைதீகப்பேய்
மார்க்கமது தீர்ந்துநற் சிலாக்கிய சமத்துவ
மாண்போங்க அருள் புரிகுவாய்
(பாட்டு) பல்லவி எடுப்பு.
கருணாநிதியே தியானி காத்தருள் செய்திடும் பவானி
அ. ப. எடுப்பு.
சரணுகெதி தருவாய் நிதி
தாயே அம்பிகை கண்பாரும் (அன்)

---

## கவியரசு பாரதியார் வணக்கம்.

ஞான பண்டித மோதிலால் என்ற மெட்டு.

தேசியக் கவிச் சிங்கமே திகழ் தங்கமே (தே)
மாசிலாச் சீலனே மாசக்தி பாலனே
தேசத்திற் கனுகூலனே நேசமிகுந்த (தே)
தமிழ்க்கவிக் கோனே சமத்துவத் தோனே
அமிழ்தினு மினியோனே அன்பகத்தோனே (தே)

தொகையறு

நாட்டிலுளவெம் மதமுஞ் சம்மதமென் றெண்ணி
மிக்க ஞானங் கொண்டோய்
கேட்டை விளைவிக்க வந்த தீண்டாமை நீங்க
உயர் கேண்மை நீதி
ஊட்டியே மக்களுக்குட் சமத்வமென்றும்
நிலைநிற்க ஓதி முரசுப்
பாட்டதனைப் படித்துரைத்து மூட நம்பிக்கை
ஒழிக்கப் பாடுபட்டோய்

பாட்டு

மனித சமூகம் வாழும் வைபோகம்
இனிதுரைத்தா யேகம் இன்ப மனேகம் (தே)

---

ஆண்டவன் தெரிசனமே என்ற மெட்டு.

வேண்டுவோம் சமத்துவமே—வித்யாசப்பேய்
மாண்டொழிந் திதந்தருமே (வே)

தீண்டாமை மாசின் தீங்கதுபோக
ஆண்டானடிமையகன் றேக அன்பாக (வே)

துன்மார்க்கப் பாவம் தொடாநற் போதம்
சன்மார்க்கப் பாரதியின் கீதம் நம்வேதம் (வே)

சுதந்திர வாழ்வே சுகத்திற்கோ ரெல்லை
மதம் ஜாதி பேதமது மில்லை மகாத்மா சொல்லை (வே)

---

கந்தா காருண்யனே என்ற மெட்டு.

அன்பு வாழ்வோங்குக அடிமைப்பேய் நீங்குக
இன்ப முண்டாகுக இன்னலகன் றேகுக (அன்)

துன்பமானதீண் டாமை நீங்கி
தூயசமத்துவம் வாழ்கவே
சூதெனுமூ டப்பழக்கத்
தொல்லை யின்று வீழ்கவே

நாடும் சீர்திருத்தம் நன்மைக்கே பொருத்தம்
ஓடும் துயர் வருத்தம் ஓங்கும் சகோதரத்வம் (அன்)

எந்தச் சாத்திர வேதந்தனிலும்
இல்லை இல்லைதீண் டாமையே
ஏனோயிந்தச் சாதிபேதம்
இனியேனும் வேண் டாமையே

வேண்டாம் வைதீகமே விபரீத மோகமே
தீண்டாமை வேகமே செல்லாதழிந் தேகுமே (அன்)

---

இராகம்—செஞ்சுருட்டி. தாளம்—ஆதி.

பல்லவி.

சேவை சேவை உண்மை
தேர்ந்த காந்திஜீ தாழ்ந்தபேர்க்குச் செயும்(சே)

மகுடச் சந்தம்.

தீதிலாது மத சாதி பேதமற (சே)
சித்த சுத்தியுள பக்தரித் ததிசெய் (சே)

சரணம்.

பாவத் தீண்டாமைப் பேயைப் போக்க இந்த
பாரில் வித்தியாசத்தை நீக்க
தேவையான நிதி சேர்த்து அரிஜனங்கள்
செம்மை ஓங்கப்பெருந் துன்மை நீங்கச்செயும் (சே)

வேற்றுமையென்ற மூடப் பழக்கம் சில
வீண்பிடி வாதிகள்செய் முழக்கம்
சாற்றும் ஆண்டானடிமைக்
கூற்றுமிஃதோர் கொடுமை
தன்னலம் வீழ்கக் கவி மன்னன் பாரதி சொன்ன(சே

---

சத்தியமேன்றும் தளரா நாடு—என்ற மெட்டு.

கண்ணிகள்.

அன்பு மிளிரும் பாரத தேசம் தன்னில்
அகம்பாவத் தீண்டாமையின் மோசம்
துன்பந் தந்து மக்களையே நாசம் செய்து
தொல்லைகட்கா ளாக்குதேயா பாசம் (அன்)

தந்திரவாதிகள் செய்த வழக்கம் தீய
தன்மையா மறியாமைதுற் பழக்கம்
தொந்தரவு செய்துமே வீண் முழக்கம் நம்மைத்
துன்பஞ் செய்குதே கண்மூடிப் பழக்கம் (அன்)

வாழு மொற்றுமை கெடுக்குங் கூட்டம் மட
வைதீகர்கள் செய்யும் பொம்ம லாட்டம்
ஏழரைக் கோடி ஜனங்கள் வாட்டம் கொண்டு
இன்ன லடைந்தார் பெருந்திண் டாட்டம் (அன்)

வஞ்சகர்களாலே சாதி பேதம் மிக
வளர்ந்ததால் எழுந்ததே வாதம்
நெஞ்ச மிரங்காதபிடி வாதம் செய்து
நீசரெனப் பேசுவதோ நீதம் (அன்)
எக்காலம் நீங்குமிந்தப் பாவம் இனி
எப்போது நீங்கும் நாட்டின் சாபம்
நற்கால மிருள்நீங்கு தீபம் காந்தி
நவின்ற மொழியே நல்வி வேகம் (அன்)
மனிதனை மனிதன் செய் கொடுமை சொல்ல
மனங் கொதிக்குதே பெரு மடமை
இனி முதற் றீண்டாமை யடிமை என்ற
இருளை யகற்றுதல்நங் கடமை (அன்)

---

இந்தியா தேசமடி—என்ற மெட்டு.

ஞானமிகுந் தேசத்திலே
நயவஞ்சவை தீகத்திலே
ஈனர்களென்றே சிலரை குறவஞ்சியே
எண்ணித் தள்ளலாகுமோடி
திக்கு வேறின்றித் திரிந்து
தீண்டாமையாற் சீர்குலைந்து
துக்கங்கொண்டு வாடுகின்றார் குறவஞ்சியே
சூதறியா மாந்தரடி
மானங்கெட்ட செய்கையடி
மனிதரைத் தீட்டென்பதடி
தீனரிவ ராகுமடி குறவஞ்சியே
தீண்டாமையின் கேதுக்கடி

நெருப்பு மின்சார சக்தி
நீளரவு சிங்கம் புலி
இருக்கு மிடத்திலடி குறவஞ்சியே
இருக்கட்டுந் தீண்டாமையடி
விருப்பமொடு இந்து மதம்
மேவி வாழ்வோரைத் தீட்டெனல்
சிரிப்புவந்து சேருமடி குறவஞ்சியே
தீமை மிக நேருமடி
அடுத்துவந்தாலுங் குற்றம்
ஆலயத்திற் சென்றால் குற்றம்
எடுத்தெடுத்துப் பேசுகின்றார் குறவஞ்சியே
இதம்விடுத்து யேசுகின்றார்
கும்பிடாது போனாற் குற்றம்
கூலிப்பணங் கேட்டாற் குற்றம்
அப்புவியிலிந்தப் பாவம் குறவஞ்சியே
அகன்றொழித லென்று சாபம்
மக்களை ஒதுக்கிவைத்த
மாபாதகக் கொடுமை
எக்காலம் நீங்குமடி குறவஞ்சியே
இன்பமென்றுண் டாகுமடி (ஞா)

---

தேடிவந்தேனே வள்ளிமானே—என்ற மெட்டு.

தீய தீண்டாமை பெருங் கோபம் மிக்க
தூய நாட்டினில் அரும் பாவம் சாபம் (தீய)
சீலமே மிகு மனிதர்களையே யலங்
கோலமே செய்திஞ் ஞால மீதில் வாழ் (தீய)

சித்தப் பிரமைத் திமிருள சாதிப்
பித்தர்ச் சாத்திரப் பீதி யனீதி (தீய)
செருக்கெனுங்குல மமதை யுண்டாக்கும்
மறுக்கு மன்பின் வழியதை நீக்கும் (தீய)
நாயினுங் கேவலமாய்
நம்மவரைக் கீட்குலமாய்
நாசமே செய மாசுகொண்டுது
வேஷமே செயு மோசமாமிது (தீய)

---

விருத்தம்.

மறப்பினு மகத்தைவிட்டு மாறுணக் கொடுமை செய்து
வருத்தி மக்கட்
பிறப்பினிலுயர்வு தாழ்வுப் பேதங்கள் பலவகுத்துப்
பிரிந்து நின்ருேம்
திறப்படு சுதந்ர வாழ்வின் சீரெங்கு மோங்குதற்குச்
சேவை செய்து
சிறப்புறும் அன்பையேற்றுத் தீண்டாமை நீக்கி ஒன்று
சேர்ந்து வாழ்வாம்

---

இராகம்-ஆனந்த பைரவி—தாளம்-ஆதி.

பல்லவி.

தீண்டாமை விடுப்போம் சிறுமை மடிப்போம்
திறமை யெடுப்போம் தினமுனன் மனதொடு (தீண்)

அனுபல்லவி.

வேண்டாம் வைதீகம் வீண் சாதிமோசம்
மேற்குலத்தவர் கீழ்க்குலத்தவர்
பார்க்குளுண் டெனும் வாக்கியமற (தீண்)

சரணம்.

மதப் பழிப்பும் குலவிழிவுங் கெட
மகத்வ வொற்றுமை தழைத்து நின்றிட
உதிக்குஞ் சுதந்திரக் கதிரவன் ஓங்கிட
ஓது காந்தி மொழி தீதிலாத வழி
உலகத்தவர் பலமுற்றிட
நிலை சத்திய வழி யுற்றிட (தீண்)

---

பண்டாரம் போல வந்த—என்ற மெட்டு.

திண்டாட வோர்சிலரைத்
தீட்டென்று தள்ளிவைத்த
செய்தி ஓதும் வைதீகப் பித்தரே
சாதிப் பைத்யரே பொய்ச் சமர்த்தரே
திடமுழு மனதுட னடிமையாய் (திண்)

கொண்டாடுந் திருவள்ளுவர்
கோதில்லா பாணன் நந்தன்
குற்றமுள்ள தீண்டாத கோத்திரம்
சொல்லும் சாத்திரம் செய்தீர் தோத்திரம்
கோட்டிபிடித்த சேட்டையாளர்காள் (திண்)

பன்றி நாய்கள் நடக்கும்
பாதையிலும் மனிதர்
பாதம்பட்டாற் குற்றமென் றேசுறீர்
ஈனம் பேசுறீர் தீண்டக் கூசுறீர்
பழியிது வறியாமல் வஞ்சக
மொழி புகலுதல் தகுதியல்லவே (திண்)

நன்றோ சாதிவித்யாசம்
ஞாயமா வைதீகரே
நடுநிலைமை வகித்துச் சாற்றுவீர்
அன்பைப் போற்றுவீர் கோப மாற்றுவீர்
நயவஞ்சனையின் செயலினாலே
கயவர்களெனப் புவியின் மேலே (திண்)

---

தரவேணும் எனதாசை—என்ற மெட்டு.

ஒழியாதோ அறியாமை உலகினிலெங்குந் தீமை (ஒழி)
பழிபாவமே நிறைந்து பாதகத்திற் சிறந்து
பறையர் புலையர் ஈனர்களென
முறையிடும் பெருங் குறை மடமைகள் (ஒழி)
வேற்றுமை வித்யாசமென்றும் மேற்குலங் கீட்குலங்களென்றும்
வீணாகக் கொடிய ஆணவத் திமிர்
பூணாது சமத்வம் பேணவே பேதம் (ஒழி)
ஏழைக் கோடி ஜனங்கள் ஏழ்மைமிகு நம்மினங்கள்
இன்னிலத்தினிற் றீண்டாதாரென
சொன்ன சாத்திரப் பூண்டழிந்தினி (ஒழி)
மானிலம் புகழும் ஞானி மகத்துவமிகுங் கியானி
மந்திர குருவாம் விவேகா
னந்த முனிவன் சிந்தனைபோல (ஒழி)
பாவமெனுந் தீமை போக்க பாருளோர்க்கு நன்மையாக்க
பக்ஷத்தொடு தாய் பாரதி
மெச்சப் பெரும் லஜ்ஜைக்குறை (ஒழி)

---

தாழ்த்தப்பட்ட சோதரரை என்ற மெட்டு.

பல்லவி

மக்களை யடிமையாக்கும் மடமை நீங்கவே
மடமை நீங்கவே சமத்வ மாண்பு ஓங்கவே (மக்)

அனுபல்லவி

துக்கமுண் டாகுதையோ சொல்லவெட்க மாகுதையோ
எக்காலம் நீங்குமிந்த இழிவென்ற பாவம்
இழிவென்ற பாவம் வெகு ஏழைகள் சாபம் (மக்)

தொகையரு

காற்று மழை வெயில் குளிரும் பாராமலே யுழைத்துக்
கஷ்டமுற்றுச்
சோற்றுக்கும் வழியின்றிப் பட்டினியால் வாடி
மிகத்துன்பங் கொண்டார்
ஏற்றஇந்து மதத்தினிலே அன்பு கொண்டு
இன்னலடைந் தேங்கி நிற்கும்
மாற்றமிலா நம்முடைய சோதரரை இழிவுசெய்து
வருத்தலாமோ

(பாட்டு.) அனுபல்லவி எடுப்பு.

ஆண்டவனே கண்பாரும் அடிமைத் துயரந்தீரும்
தீண்டாமை நீங்கி அன்பு செழிப்ப தெந்நாள்
செழிப்ப தெந்நாள் துன்பம் ஒழிப்பதெந்நாள் (மக்)

விருத்தம்

ஒருதாய்வயிற்றினிலே உற்பவித்த
மக்களுக்குள் ஓங்குபேதம்
வருமோ எந்நாளும் வழுவாத
நற்சீலம் வளர்த்திநாட்டில்
திருமா துலாவச் செங்கலைமா
துங்குலவச் சீர்த்தி யன்பின்
உருவான பாரதத்தாய்
மனமகிழப் பேதமதை ஓட்டி வாழ்வாம்.

---

இராகம்—அடாணு. தாளம்—ரூபகம்.

பல்லவி

தாணிமீது சமரசமே
தழைக்கில் மேன்மை நமது வசமே (தர)

அனுபல்லவி

முரணிலாச் சகோதரத்வம்
முனிவன் காந்தி சொல் மகத்வம் (தர)

சரணம்

தருணம் ஒற்றுமை தனையே கூட்டுவோம்
சத்திய மார்க்கத் தருமம் நாட்டுவோம்
சாதிவித்தி யாசம்
ஈதுமுற்று மோசம்
தாழ்வுயர்வு நீங்கி யன்பின்
வாழ்வுயர்வு வோங்க வின்பம்
சகல சாதி மத பேதமும்
அகலுமாறு புகலும் நல்ல (தர)

வெள்ளிமலை யாண்டிபெற்ற—என்ற மெட்டு.

புண்ணிய மிகுந்ததிரு பூமியா நம்மிந்தியாவில்
எண்ணிலாவுன் சேய்களம்மா பாரததேவியே
இன்னல்கொண்டு வாடுகின்றார் வீராங்கனையே

நாய் கழுதை பன்றிமுதல் நடமாடுமிடமதிலுன்
சேய்கள் செல்ல மறுக்கின்றனர் பாரததேவியே
தீட்டுண்டெனவே மொழிந்தார் வீராங்கனையே

தன்னலமெனும் வைதீக சாக்கடைக்குள்ளேகிடந்து
இன்ன லிழைக்கின்றனரே பாரததேவியே
என்ன செய்வோம் அன்னையேயாம் வீராங்கனையே

மூதறிவதை விடுத்து மூடநம்பிக்கை பிடித்து
சாதிபேதம் பேசுகின்றார் பாரததேவியே
சத்தியங் கைவிட்டனர்கள் வீராங்கனையே

கவிபாரதிப் பெருமான் கண்ட கனவு நனவாய்
புதிமீதிலே நிகழ பாரததேவியே
புரிவாயருள் சமயம் வீராங்கனையே

என்றுமடியு மெங்கள் இன்னலெனுந் தீண்டாமைப் பேய்
நன்றோங்கி நாங்கள் வாழ்கப் பாரததேவியே
நல்வர மின்றேயருள்செய் வீராங்கனையே (பு)

---

தசரத ராஜ குமாரா—என்ற மெட்டு.

பல்லவி.

சாதியிலுயர்வுதாழ் வேது இது தீது
பெரும்வாது குலமேது (சா)

அநுபல்லவி.

ஆதியிற் பிறப்பினி விழிவென்ப தில்லை
அந்தோ நம் நாட்டினி லிது வென்ன தொல்லை
சோதிக் கடவுள் சாதி சொல்லவு மில்லை
துன்பமே வைதீகர் செய் கொடுமை
மூட மடமை இழி வடிமை மிகக் கடுமை (சா)

பாணன் திருவள்ளுவன் பகரிழி குலமோ
பறையனென நந்தனைப் பழிக்குமிந் நிலமோ
வீணுக்கேன் சாதிச் சண்டை விரும்புதல்நலமோ
பேண்மையாங் காந்தி சொல்லை ஏற்போம்
அன்பைக் காப்போம் கலி மாய்ப்போம்
துயர் தீர்ப்போம் (சா)

தேசியக் கவிஞர்கோன் திருமொழி படிப்போம்
தீய மூடப் பழக்கச் சிந்தனை விடுப்போம்
மாசறு சமநிலை மார்க்கத்தைப் பிடிப்போம்
மாபெரும் நன்மை யுண் டாகும்
மடி யேகும் துயர் போகும் பல மாகும் (சா)

---

காந்தி ரிஷி—என்ற மெட்டு.

பல்லவி.

தீண்டாமையே பல தீமையுண்டாக்குஞ் சாதி (தீண்)

அநுபல்லவி.

தீண்டாமையே மதத்தீண்டாமையே சாதித்தீண்டாமையே
நம்முள் தீராப் பகைவளர்க்குந் தீண்டாமையே (தீண்)

சரணம்.

ஆண்டவன் படைப்பினிலே யடிமையென்று யாருமில்லை
ஐயோ யிதைப்போல பாவம் அவனியில் வேறேதுமில்லை
நீண்டபுகழ் சமத்துவத்தின் நேர்மையுள்ள காந்திசொல்லை
நேயமொடு கடைப்பிடித்தால் நீங்கிடும் நம் சாதித்தொல்லை
நீசமென்றே யன்பு
நேசமதைக் கெடுக்குந் (தீண்)

இந்து மதத்தினுக்கே இதைவிடவே ரீனமுண்டோ
ஏற்றந் தாழ்வென்றே நமக்குள் நாற்றமுறச் செய்துகொண்டோம்
சொந்த நம் சகோதரரை தூவென யிகழ்ந்து விண்டோம்
சோம்பலுண்டாக்கும் வைதீகச் சூழ்ச்சியெனும் நஞ்சையுண்டோம்
சூதும் வாதும் கொண்ட
சோர வைதீகர் பேசுந் (தீண்)

ஒன்றுபட்டாலுண்டு வாழ்வென் றுரைத்த மொழிப்படி நடப்போம்
உயர்கவி நம் பாரதியின் ஜெய முரசுதனை யடிப்போம்
நன்றெனுஞ் சகோதரத்வம் நாட்டி ஜெயக்கொடி பிடிப்போம்
நற்புகழ் ஓம் சக்தி மந்த்ர வற்புதந்தனைப் படிப்போம்
நாட்டினிலே குலத்
தீட்டென்றிடுந் துற்கோபத் (தீண்)

---

இராகம்—தேசிகதோடி. தாளம்—ரூபகம்.

பல்லவி

பாருந் தீண்டாமைச் சூதே
பாரி லலங்கோல மிதே (பா)

அனுபல்லவி

சேரும் புகழ் புண்யரே
திட ஜீவ காருண்யரே (பா)

பின் முடுகுச் சந்தம்

திட்டப் பட்டோம் ஒற்றுமை
விட்டுக் கெட்டோம் ஜெகமதில் (பா)

தினகரனுலவிடு உலகினில்
அனைவருஞ்சரி நிகரென நினை (பா)

திகழ்விற்பன மகிமைக்குணங்
கமழ்நிற்பன மனதொப்பியே (பா)

தேவுக்கும் கிறிஸ்துவ யாக்
கோபுக்கும் மகமது பா
க்ஷாவுக்கும் வேற்றுமை யுளதோ (பா)

தித்திக்கும் சமத்துவ நிலைப்
பக்திக்கும் இகபரசுக
முத்திக்கும் எதிரெனச் சிலர்
ஒத்திக்கும் பிடுவது மழகோ (பா)

தொகையறு

பாதாள லோகத்திற் பிறந்தாரோ தீண்டாதார்
பகுத்தறிவு கொண்டு பாரும்
பாமரத் தன்மையெனும் மூட நம்பிக்கையால்
பலசாதியே பிரித்து
பஞ்சமரென் றேசிமிக வஞ்சகஞ் செய்தயிப்
பாவமது யெங்கு செல்லும்
பழைய புராணக் குப்பை கைக்கொண்ட தீண்டாமை
படுத்திய கொடுமை யொன்றே

(பாட்டு.) முடுகுச் சந்தம்

கோரு மற்புதங்கள் மிகு
கோடி கோடி ஜனத்திரள்
குலேந்து மெலிந்து கிடந்துழன்றும்—தேறக்
கொஞ்சமு நெஞ்சமிலாத
வஞ்சகர்கள் செய்கொடுமை
குறைத்து ஒற்றுமை சேரவாரும்—இதில்மாமிச
அஸ்தி வேறுண்டோ வேத சாத்திர
புஸ்தகத்தி லாதரவுண்டோ
மனிதப் பிறப்பில் பேதமுண்டோ தமிழ்
மக்களெல்லாம் மிக்கப் போற்றும்
சற்குரு பாரதி நூலே
வாசித்தறிந்து கொஞ்சம் பேசுவீர் புகழ்
மலிந்த குலத்தினர்கள்
இழிந்த மனிதரென
மனதில் நினைக்கத் துக்கமாகுதே தயை
வைத்துமே காந்தி மகான் சொல்
இத்தநி மதித்து நீநில்
வாழ்த்துவோம் சகோதரத்வ வாழ்க்கையே
மகிழ் பொங்கிடு வழிகண்டிட
விரைந்தே செல்லுவோமே
புகழ்தங்கிடும்படி தீங்கதை
யிகழ்ந்தே வெல்லுவோமே (பாரு)

ஸ்ரீசிவஷண்முக வேலனே—என்ற மெட்டு.

மாதா ஓம் பாரத நாரணி
மாதவத்தோர் தொழுங்காரணி
போதா வஹிம்சா நற்பூரணி
போற்றினேங் காத்தருள் ஆரணி (மாதா)
தீண்டாமை நோயினல் வாடினேம்
செம்மை குன்றியே திண்டாடினேம்
ஆண்டவளே யுனைத் தேடினேம்
அன்புவாழ் வோங்கிடப் பாடினேம் (மாதா)
வேற்றுமைப் பேய்தனைப் போக்குவாய்
மேன்மைச் சமத்வ முண்டாக்குவாய்
கூற்றெனும் பேதத்தை நீக்குவாய்
கூடிவாழும் நிலை ஆக்குவாய் (மாதா)

---

## வாழ்த்து.

வாழிய செந்தமிழ் !
வாழ்கநற் றமிழர் !
வாழிய பாரத
மணித்திரு நாடு !
இன்றெமை வருத்தும்
இன்னல்கள் மாய்க !
நன்மைவந் தெய்துக !
தீதெலாம் நலிக !
அறம் வளர்ந்திடுக !
மறம் மடிவுறுக !
ஆரிய நாட்டினர்
ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள்
சிறந்துமிக் கோங்குக !
நந்தேயத்தினர்
நாடோறும் உயர்க !
வந்தேமாதரம் !
வந்தேமாதரம் !

## ஹரிஜன சேவா கீதம்
## இரண்டாம் பாகம் முற்றிற்று.

---